திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆர். எஸ். மங்களம் கண்மாய் 20 கிலோ மீட்டர் அளவு உள்ள, 12 ஆயிரம் ஏக்கர்களுக்குப் பாசன வசதி கொடுக்கக்கூடிய மிகப் பெரிய கண்மாய். இந்தக் கண்மாயின் தென் பகுதியில் 560 அடி நீளமுள்ள ஒரு கலுங்கு இருக்கிறது. அந்தக் கலுங்கில் மழைக் காலத்தில் தண்ணீர் அதிகமாகப் போவதன் காரணமாக, ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு இடையிலே உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அழிந்து விடுகின்றன. இதை கடந்த 7 வருடங்களாக அரசினுடைய பார்வைக்கு கொண்டு வந்தேன். இருந்தாலும், கூட, இன்றைக்கு வரையிலும் எஸ்டிமேட் சேங்க்சன் ஆகாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. எனவே சீக்கிரத்தில் அந்த எஸ்டிமேட்டை சேங்க்சன் செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அமைச்சர் ஏற்பாடு செய்வாரா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல இப்போது ஆய்வு நிலை முடிந்து, அதற்குக் கூடுதல் விவரங்கள் தேவைப்பட்ட காரணத்தால் தல அதிகாரிகளிடம் அந்த விவரங்களைக் கேட்டிருக்கிறோம். ஆகவே அந்த விவரங்கள் வந்த பிறகு இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நந்தன் கால்வாய்த் திட்டம்.

(*131—வினா 19336)—திரு. ஆர். சுந்தரமூர்த்தி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் நந்தன் கால்வாய்த் திட்டம் முடிவு பெற்றுவிட்டதா ?

(ஆ) சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீரை நந்தன் கால்வாய்க்கு விடும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம் (ஆ) இல்லை.